Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annamalai Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 280 உள்ளூர் - 08.10.2026 வியாழக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 280 வெளியூர் - 09.10.2026 வெள்ளிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**ஐப்பசியில் அதிர்ஷ்டக் கதவைத் திறக்கும் 'சுக்கிராதித்ய யோகம்'!**

**டிஎன்பிஎஸ்சி குரூப்4: 6,574 பணியிடங்கள்!**

**'வெற்றிப்பயணம்': ஆண்களுக்கு கட்டணம் குறைப்பு!**

**பிரபல நடிகர் நானா படேகர் காலமானார்!**

## இந்தியாவில் ஸ்டார்லிங் தடுக்கப்படுகிறதா? எலான் மஸ்க் பதிவால் பரபரப்பு!

வாஷிங்டன், அக். 08–

எக்ஸ் தளத்தில் எலான் மஸ்க் வெளியிட்ட பதிவில் கூறியதாவது: இந்திய மக்களிடையே தங்களது ஏகபோக ஆதிக்கத்தை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்காக சில தொழிலதிபர்கள் ஸ்டார்லிங்க் சேவையைத் தடுத்து வருகிறார்கள். அவர்கள் யார் என்பதை நீங்கள் யூகிக்கலாம். இது இந்திய மக்களுக்கு எதிரான குற்றம் என்று பதிவிட்டுள்ளார்.




இந்தியாவில் ஸ்டார்லிங்க் சேவையைத் தொடங்குவதற்கான பெரும்பாலான உள்கட்டமைப்புப் பணிகளை ஸ்டார்லிங் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது. நாடு முழுவதும் 20 கேட்வே தளங்கள் மற்றும் நூற்றுக்கணக்கான ஆன்டெனாக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக ஸ்டார்லிங்க் தரப்பில் கூறப்படுகிறது. எனினும், ஸ்டார்லிங்க் இந்தியாவில் வர்த்தக ரீதியாக சேவையைத் தொடங்குவதற்கு இறுதி பாதுகாப்பு அனுமதிகள் மற்றும் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு உள்ளிட்ட சில ஒழுங்குமுறை நடவடிக்கைகள் இன்னும் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில்தான் எலான் மஸ்க் மேற்கூறிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

எலான் மஸ்க் பெயர் குறிப்பிடாவிட்டாலும், அவரது பதிவு இந்தியாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களான ரிலையன்ஸ் ஜியோ மற்றும் பார்தி ஏர்டெல் நிறுவனங்களின் உரிமையாளர்களான முகேஷ் அம்பானி மற்றும் சுனில் பார்தி மிட்டல் ஆகியோரை மறைமுகமாகக் கூறுவதாக வலைத்தளங்களில் பலரும் குறிப்பிட்டு வருகிறார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதி கடற்படைத் தலைவர் ரியர் அட்மிரல் உப்பல் குண்டு, VSM மற்றும் லெப்டினண்ட் கமாண்டர் அரவிந்த கிருஷ்ணன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

## தேர்தல் ஆணையருக்கு எதிராகப் போராட்டம் தீவிரம்!

# ராகுல், பிரியங்கா கைது - விடுவிப்பு!

# கூடுதலாக 23,000 பாதுகாப்பு வீரர்கள்!

## குடியரசுத் தலைவரிடம் முறையிட முயற்சி!!

புதுடெல்லி, அக். 08–

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், மத்திய பாஜக அரசுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டும் காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சிகள், அவர் பதவி விலகக் கோரும் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தத் திட்டமிட்டுள்ளன.



தில்லியில் செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்ட ராகுல் காந்தி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். தொடர்ந்து புதன்கிழமை ஜந்தர் மந்தருக்குப் பேருந்துகளில் சென்ற கூட்டணி எம்.பி.க்களை காவல்துறையினர் நடுவழியில் தடுத்து நிறுத்தினர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு அன்றிரவே விடுவிக்கப்பட்டனர்.

மேலும், இன்று ராகுல், பிரியங்கா மீது 3 பிரிவுகளில் வழக்குகள் தொடர்ந்துள்ளனர். மீண்டும் இன்று போராட்டம் நடத்தவும், கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள் முழு அளவில் பங்கேற்பதை உறுதிசெய்யவும் கட்சித் தலைமைகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தகவல் வெளியாகி யுள்ளது. அக்டோபர் 10–ஆம் தேதியும் மற்றொரு போராட்டம் அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனிடையே, தில்லியில் ஏற்கெனவே பாதுகாப்புப் படையினர் பணியில் உள்ள நிலையில், மேலும் 221 கம்பெனிகளைச் சேர்ந்த சுமார் 23,000 மத்திய ஆயுதக் காவல் படையினர் வரவழைக்கப்பட்டுள்ளனர். ஜம்மு காஷ்மீர், மேற்கு வங்கம், சத்தீஸ்கர் பகுதிகளிலிருந்து வரும் இவர்கள், அக்டோபர் 8 முதல் 12 வரை பாதுகாப்பு மற்றும் சட்டம்ஒழுங்குப் பணிகளில் ஈடுபட மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அசம்பாவிதங்களைத் தடுப்பதற்காக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

மேலும், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தமான எஸ்.ஐ.ஆர். நடைமுறை மற்றும் ஞானேஷ் குமார் மீதான புகார்கள் தொடர்பாகக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவைச் சந்திக்க இந்தியா கூட்டணி நேரம் கேட்டுள்ளது. 15 தலைவர்களுக்கு அனுமதி கோரப்பட்ட நிலையில், 10 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மல்லிகார்ஜுன கார்கே, ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், மமதா பானர்ஜி உள்ளிட்டோர் பிரதிநிதிகள் குழுவில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. சந்திப்புக்கான நேரம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

## இடைத்தேர்தலில் வெற்றி யாருக்கு?

சென்னை, அக். 08–

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகம் (தனி), திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தாராபுரம் (தனி) ஆகிய தொகுதிகளுக்கு நேற்று முன்தினம் (அக்.6) இடைத்தேர்தல் நடைபெற்றது. தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு பதவி ஏற்ற 4 மாதத்தில், இந்த இடைத்தேர்தல் வந்ததால், புதிய அரசை எடைபோடும் தேர்தலாக இது பார்க்கப்படுகிறது.




**இடைத்தேர்தல் வெற்றி யாருக்கு முக்கியம்?**

ஏற்கனவே, ஆட்சி அமைக்க பெரும்பான்மைக்கு தேவையான 118 தொகுதிகள் த.வெ.க.வுக்கு கிடைக்காததால் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. காங்கிரஸ், இரு கம்யூனிஸ்டு கட்சிகள், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் த.வெ.க.வுக்கு ஆதரவு அளித்தாலும், இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் தொடர்ந்து குடைச்சல் கொடுத்து வருகின்றன.

இதனால், மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி என்பது த.வெ.க. அரசுக்கு முக்கிய தேவையாக கருதப்படுகிறது. அதே நேரத்தில், தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய எதிர்க்கட்சிகள் இடைத்தேர்தலில் வெற்றி பெற்றால், அது த.வெ.க. அரசுக்கு பின்னடைவாக பார்க்கப்படுவதுடன், அது ஆட்சியை கலைக்கும் நிலைக்கே கொண்டு செல்லும் அபாயமும் உள்ளது.

**தலைவர்கள் தீவிர பிரசாரம்**

இந்த இக்கட்டான நிலையில் தான் முதல்–அமைச்சர் ஜோசப் விஜய், தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஆரம்பத்தில் ஆளுங்கட்சி வேட்பாளர்களுக்கே வெற்றி வாய்ப்பு இருப்பதுபோல் தெரிந்தாலும் தேர்தல் நெருங்க.. நெருங்க.. சற்று மங்கத் தொடங்கியது. யாருக்கு வெற்றி கிட்டும்? என்பது மதில் மேல் பூனையாக அமர்ந்திருக்கும் நிலையில் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது.

**5 முனைப்போட்டி**

5 முனைப்போட்டி நிலவிய நிலையில், மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் (த.வெ.க.), பரந்தாமன் (தி.மு.க.), கணிதா சம்பத் (அ.தி.மு.க.), சுகந்தி (மா.கம்யூ.), ஜானகிராமன் (நாம் தமிழர்) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

இதேபோல், தாராபுரம் தொகுதியில் சத்யபாமா (த.வெ.க.), சுகன்யா (தி.மு.க.), பானுமதி (அ.தி.மு.க.), லட்சுமணன் (இ.கம்யூ.), கார்த்திகா (நாம் தமிழர்) ஆகியோர் போட்டியிட்டனர்.

**வாக்காளர்கள் எவ்வளவு?**

மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் ஓட்டுபோட தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 1,04,926 ஆண் வாக்காளர்களும், 1,08,797 பெண் வாக்காளர்களும், 65 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவார்கள்.

இதேபோல், தாராபுரம் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்கள் ஓட்டுபோட தகுதி பெற்றிருந்தனர். இவர்களில் 1,07,285 ஆண் வாக்காளர்களும், 1,16,013 பெண் வாக்காளர்களும், 8 மூன்றாம் பாலின வாக்காளர்களும் அடங்குவார்கள்.

**வாக்கு சதவீதம் குறைந்தது**

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற சட்டசபை பொதுத் தேர்தலின்போது மதுராந்தகம் தொகுதியில் 93.22 சதவீத வாக்குகளும், தாராபுரம் தொகுதியில் 89.89 வாக்குகளும் பதிவாகி இருந்தன.

ஆனால், இடைத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதியில் 85.99 சதவீத வாக்குகளும், தாராபுரம் தொகுதியில் 80.31 சதவீத வாக்குகளும் பதிவாகி இருந்தன. அதாவது, மதுராந்தகம் தொகுதியில் 7.23 சதவீதம் அளவுக்கும், தாராபுரம் தொகுதியில் 9.58 சதவீதம் அளவுக்கும் வாக்குப்பதிவு குறைந்து போய் இருந்தது.

**அரசியல் கட்சி தலைவர்கள் கலக்கம்**

இடைத்தேர்தலில் வாக்கு சதவீதம் குறைந்துபோனது, அரசியல் கட்சி தலைவர்கள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முறை இளைஞர்கள், மாணவர்கள் ஆகியோர் வாக்களிக்க ஆர்வம் காட்டவில்லை என்று கூறப்படுகிறது. பெரும்பாலான மாணவர்கள் சென்னையில் படித்து கொண்டிருப்பதால், ஓட்டுபோட ஊருக்கு செல்லவில்லை என்று கூறப்படுகிறது.

சட்டசபை பொதுத் தேர்தலின்போது இளைஞர்கள் ஆர்வமாக வந்து வாக்களித்ததால், த.வெ.க. வெற்றி பெற்றது. ஆனால், இடைத்தேர்தலில் அது குறைந்து போய் இருப்பதால், முதல்–அமைச்சர் விஜய் உள்பட த.வெ.க.வினர் அச்சத்தில் உள்ளனர்.

**த.வெ.க. – அ.தி.மு.க. இடையேதான் கடும் போட்டி?**

எது எப்படி என்றாலும், (அக்.9) காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட இருக்கின்றன. முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படுகின்றன. அப்போது இருந்தே முன்னணி நிலவரங்கள் தெரியவரும்.

மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் த.வெ.க. – அ.தி.மு.க. இடையேதான் கடும் போட்டி இருக்கும் என்று கூறப்படுகிறது. ஏற்கனவே, இந்த இரு தொகுதிகளிலும் அ.தி.மு.க.வே வெற்றி பெற்றிருந்தது. அப்போது, அ.தி.மு.க. சார்பில் வெற்றி பெற்ற அதே வேட்பாளர்கள், தற்போது த.வெ.க. சார்பில் களம் இறங்கி இருப்பதால், வெற்றி என்பது மதில் மேல் பூனையாகவே இருந்து கொண்டிருக்கிறது. யாருக்கு வெற்றி கிடைத்தாலும் வாக்கு வித்தியாசம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

## தாய்மாமன் தங்க மோதிரம்: நிபந்தனைகள் தளர்வு!



சென்னை, அக். 08–

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தின் நிபந்தனைகளைத் தமிழக அரசு தளர்த்தியுள்ளது.

திருமணத்துக்குப் பின் வெளிமாநிலங்களில் வசிக்கும் தமிழகப் பெண்கள், தங்கள் பெற்றோர் தமிழகத்தில் நிரந்தரமாக வசிப்பதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தால், அவர்களின் குழந்தைகளும் பயன்பெறலாம். இந்தத் தளர்வு 2026 ஜூன் 22 முதல் பிறந்த குழந்தைகளுக்குப் பொருந்தும். இதன்படி, காரைக்குடி அரசு மருத்துவமனையில் பிறந்த உமா மகேஸ்வரியின் குழந்தைக்கு தங்க மோதிரம் வழங்கப்பட்டுள்ளது.

## சொத்து விபரம் அளித்தால் பதவி உயர்வு?

சென்னை, அக். 08–

தமிழக அரசு ஊழியர்கள் அனைவரும் தங்களது சொத்து விவரங்களை அக்டோபர் 31–ஆம் தேதிக்குள் இணையத்தில் பதிவு செய்ய வேண்டும் எனத் தலைமைச் செயலாளர் சாய்குமார் உத்தரவிட்டுள்ளார். அரசின் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைப்பு இணையதளத்தில் இந்த விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஊழியர்கள் தங்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துகள் மட்டுமின்றி, சேமிப்பு, கடன் உள்ளிட்ட நிதி விவரங்களையும் முழுமையாகத் தெரிவிக்க வேண்டும். பிறர் பெயரில் சொத்துகள் வாங்கியிருந்தால், அந்தச் சொத்துகளின் விவரங்களுடன், சம்பந்தப்பட்ட நபருக்கும் ஊழியருக்கும் உள்ள உறவையும் குறிப்பிடுவது கட்டாயமாகும்.



குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சொத்து விவரங்களைத் தாக்கல் செய்த ஊழியர்களின் பெயர்கள் மட்டுமே பதவி உயர்வுக்கான பட்டியலில் சேர்க்கப்படும் என உத்தரவில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. விவரங்களைச் சமர்ப்பிக்காதவர்கள், அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதிகளை மீறியவர்களாகக் கருதப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், பதவி உயர்வை எதிர்பார்க்கும் ஊழியர்கள் தங்களது சொத்து மற்றும் நிதி விவரங்களைத் தொகுத்து, காலக்கெடுவுக்குள் பதிவேற்ற வேண்டியுள்ளது. சொத்து விவரங்களை அளிப்பது அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பொருந்தும் கடமையாக உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறர் பெயரில் உள்ள சொத்துகளையும் மறைக்காமல் தெரிவிக்க வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது. பதவி உயர்வுப் பட்டியலில் இடம்பெறுவதற்கு இந்தத் தாக்கல் அவசியமான நிபந்தனையாக அமைந்துள்ளது. எனவே, வீடு, நிலம் போன்ற சொத்துகளுடன் சேமிப்பு மற்றும் கடன் விவரங்களையும் சேர்த்து முழுமையான பதிவைச் சமர்ப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

வியாழக்கிழமை 08.10.2026

விசுவாவசு தமிழ் வருடம்

புரட்டாசி மாதம் 21-ம் தேதி

## விலைவாசியைக் கட்டுப்படுத்த... மக்களின் கடன் சுமையை உயர்த்துவதா?



விலைவாசி உயர்வால் குடும்பச் செலவுகளைச் சமாளிக்கவே மக்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், ரிசர்வ் வங்கி ரெப்போ வட்டி விகிதத்தை 0.25 சதவீதப் புள்ளிகள் உயர்த்தி, 5.50 சதவீதமாக அறிவித்துள்ளது. மூன்று ஆண்டுகளுக்கும் மேலான இடைவெளிக்குப் பிறகு எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவு, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் முயற்சி என்றாலும், கடன் வாங்கிய நடுத்தரக் குடும்பங்களுக்குப் புதிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ரெப்போ என்பது வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி வழங்கும் குறுகிய காலக் கடனுக்கான வட்டி விகிதம். இது உயரும்போது, அதன் தாக்கம் வங்கிக் கடன்களுக்கும் பரவலாம். குறிப்பாக, ரெப்போவுடன் இணைக்கப்பட்ட மாறும் வட்டிக் கடன்களில், ஒப்பந்த விதிகளுக்கும் வட்டி மறுநிர்ணயத் தேதிக்கும் ஏற்ப மாதத் தவணை அல்லது கடன் காலம் அதிகரிக்கலாம். எல்லாக் கடன்களுக்கும் உடனடியாக ஒரே மாதிரியான உயர்வு ஏற்படும் என்று கருத முடியாது.

மேற்காசியப் பதற்றம், கச்சா எண்ணெய் விலை உயர்வு, உணவுப் பொருள்களின் விலை அழுத்தம், ரூபாய் மதிப்பின் பலவீனம் ஆகியவை பொருளாதாரத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்தால், மக்களின் வாங்கும் திறன் குறையும். அதைத் தடுக்கும் பொறுப்பு ரிசர்வ் வங்கிக்கு உள்ளது. ஆனால், வட்டியை உயர்த்துவது மட்டுமே எல்லாப் பிரச்னைகளுக்கும் தீர்வாகாது.

வட்டி உயர்வால் கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்க முடியாது. பருவமழையைச் சீராக்க முடியாது. உணவுப் பொருள்களின் விநியோகத் தடைகளையும் நேரடியாக அகற்ற முடியாது. ஆகவே, பணவியல் நடவடிக்கைகளுடன் அரசின் விலைவாசிக் கட்டுப்பாட்டு முயற்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும். அத்தியாவசியப் பொருள்களின் விநியோகம், வேளாண் உற்பத்தி, சேமிப்பு வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவது அவசியம்.

வீட்டுக் கடன் வாங்கிய குடும்பத்துக்கு வட்டி உயர்வு என்பது பொருளாதாரப் புள்ளிவிவரம் அல்ல; மாதச் செலவுக் கணக்கில் ஏற்படும் கூடுதல் நெருக்கடி. சிறு தொழில்களுக்கு அது செயல்பாட்டு மூலதனச் செலவு. எனவே, வங்கிகள் வட்டி மாற்றத்தின் தாக்கத்தைத் தெளிவாகத் தெரிவித்து, தவணை மற்றும் கடன் கால மாற்றங்களை வாடிக்கையாளர்களுக்கு விளக்க வேண்டும். பொருளாதார வளர்ச்சி வலுவாக இருப்பது வரவேற்கத்த க்கது. அதன் பலன் குடும்பங்களின் வருமானத்திலும் வேலைவாய்ப்பிலும் பிரதிபலிக்க வேண்டும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் சுமை மட்டும் மக்களிடம் சென்றுவிடக் கூடாது. ரிசர்வ் வங்கியின் முடிவை மதிப்பிட வேண்டியது வட்டி உயர்ந்ததைக் கொண்டு மட்டும் அல்ல. விலைவாசி தணிகிறதா, கடன் சுமை சமாளிக்கக்கூடியதாக இருக்கிறதா, சிறு தொழில்களும் குடும்பங்களும் பாதுகாக்கப்படுகிறார்களா என்பதே அளவுகோல். மக்களின் வாழ்க்கையில் நிம்மதியை உருவாக்குவதுதான் பொருளாதாரக் கொள்கையின் உண்மையான வெற்றி.

**ஆசிரியர்:**

**மதுரை மணி**

## எஸ்ஐஆருக்கு எதிரான போராட்டம்: ஞானேஷ் குமாருக்கு Z+ பாதுகாப்பு அதிகரிப்பு!




புதுடெல்லி, அக். 08–

எஸ்ஐஆருக்கு எதிரான போராட்டம் மிகத் தீவிரமடைந்து வரும் நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிர மறுஆய்வில் முறைகேடுகள் நடந்ததாக வெளியான குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தில்லியில், ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி இந்தியா கூட்டணியைச் சேர்ந்த காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதன்கிழமை (அக். 7) போராட்டம் நடத்தினர்.

முன்னதாக, கடந்த அக். 2 ஆம் தேதி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் மும்பை சிவாஜி பூங்காவில் பிரமாண்ட போராட்டத்தை நடத்தினர். வருகிற அக். 10 ஆம் தேதி தில்லி, ஜந்தர் – மந்தரில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும் அறிவித்துள்ளனர். இதனிடையே, கர்நாடகத்தின் பெங்களூருவில் இன்று (அக். 8) காலை போராட்டம் நடத்தப் போவதாக சிஜேபி இணை ஒருங்கிணைப்பாளர் அஷுதோஷ் அறிவித்துள்ளார். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராகப் போராட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில், அவருக்கு வழங்கப்பட்ட Z+ பாதுகாப்பு மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

தலைநகர் தில்லி மற்றும் ஆக்ராவில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணையரின் இல்லங்களுக்கு வெளியே போராட்டக்காரர்கள் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் இல்லத்திற்கு வெளியேயும், தேர்தல் ஆணைய அலுவலகத்திலும் அவருக்கென தனியாகவும் காவலர்கள் அதிகளவில் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தில்லியின் அசோகா சாலையில் உள்ள தலைமைத் தேர்தல் ஆணைய அலுவலகத்தின் தலைமையகமான நிர்வாச்சன் சதனுக்குள் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (சிஐஎஸ்எஃப்) அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## பைக் டாக்சிக்கான வழிகாட்டுதல்களை 6 மாதத்தில் ஏற்படுத்த வேண்டும்- மதுரை ஐகோர்ட் கெடு!



மதுரை, அக். 08–

மதுரையைச் சேர்ந்த நவீன்குமார், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் "தமிழகத்தில் டிஜிட்டல் மைய பைக் டாக்சி சேவைகள் அதிகரித்து வருகின்றன.இந்த சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கு அரசின் திட்டமோ, விதிகளோ இல்லை.ஆட்டோ ரிக்சா, வாடகை கார்களை போல பைக் டாக்சி தனித்து இயங்க முடி யாது. எனவே அவற்றை சட்டப்பூர்வமாக இயக்க தேவையான அனுமதிகளை வழங்க உத்தரவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, பைக் டாக்சிகளை இயக்குவதற்கான முறையான அனுமதி வழங்குவது குறித்து பதில் அளிக்கும்படி உத்தரவிடப்பட்டு இருந்தது. இந்தநிலையில் இந்த வழக்கு நீதிபதிகள் வேல்முருகன், ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது.அப்போது அரசு வக்கீல் ஆஜராகி, இந்த விவகாரத்தை பொறுத்தவரை ஏற்கனவே இந்த கோர்ட்டில் தெரிவித்தபடி பைக் டாக்சிகளை இயக்குவதற்கான வழிகாட்டுதல்களை ஏற்படுத்த சிறப்பு குழு அமைக்கப்பட்டு உள்ளது.

அந்த குழு ஆராய்ந்து அளிக்கும் அறிக்கையை பெற்ற உடன் வழிகாட்டுதல்கள் பிறப்பிக்கப்படும் என தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், சிறப்பு குழுவின் அறிக்கையின்படி வழிகாட்டுதல்களை ஏற்படுத்தி அதுகுறித்த தகவல்களை 6 மாதத்தில் இந்த கோர்ட்டில் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிட்டு இந்த வழக்கை முடித்து வைத்தனர்.

## தானம், பாகப்பிரிவினைக்கு காகிதமில்லா பத்திரப்பதிவு- நவம்பர் 2 முதல் அமல்!



சென்னை, அக். 08–

தமிழகத்தில் செட்டில்மென்ட், பாகப்பிரிவினை, விடுதலை தொடர்பான பத்திரங்களை காகிதமில்லா முறையில் பதிவு செய்யும் திட்டம், நவம்பர் 2 முதல் அமலுக்கு வரும் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

புதிய திட்டங்களில் வீடு, மனை விற்பனை பத்திரங்களை சார்–பதிவாளர் அலுவலகம் செல்லாமல் பதிவு செய்யும் திட்டம் ஆகஸ்ட் 17 முதல் அமலுக்கு வந்தது. இதையடுத்து, தானப்பத்திரம், பாகப்பிரிவினை, விடுதலை, தானம் ரத்து ஆகிய பத்திரங்களை பதிவு செய்வது, 'ஆன்லைன்' முறைக்கு மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் வரும் 15 முதல் அமலுக்கு வரும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் இந்த நான்கு வகை பத்திரங்களையும் காகிதமில்லா முறையில் பத்திரப்பதிவு செய்யும் திட்டத்துக்கான கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டு உள்ளது. இதையடுத்து இத்திட்டம் வருகிற நவம்பர் 2–ம் தேதி முதல் அமலுக்கு வரும் என பதிவுத்துறை அறிவித்துள்ளது. இதற்கான அரசாணையை பதிவுத்துறை செயலர் குமரகுருபரன் பிறப்பித்துள்ளார். பதிவுத்துறையின் 'ஸ்டார் 3.0' மென்பொருளில் இதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## ஐப்பசியில் அதிர்ஷ்டக் கதவைத் திறக்கும் 'சுக்கிராதித்ய யோகம்'!



புதிய பொறுப்புகள், முதலீடுகளால் வருமானம், உழைப்புக்கான அங்கீகாரம், குடும்பத்தில் மகிழ்ச்சி! அக்டோபர் 17ஆம் தேதி உருவாகும் சூரியன்சுக்கிரன் சேர்க்கை, இந்த நான்கு ராசிகளுக்கும் சாதகமான மாற்றங்களைத் தரக்கூடும் என ஜோதிடக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

ஐப்பசி மாதம் பிறக்கும் 2026 அக்டோபர் 17ஆம் தேதி, சூரியன் துலாம் ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அங்கு ஆட்சி பெற்றுச் சஞ்சரிக்கும் சுக்கிரனுடன் சூரியன் இணைவதால், சுக்கிராதித்ய யோகம் உருவாகிறது எனக் கூறப்படுகிறது.

இந்தச் சேர்க்கையால் சில ராசிகளுக்குக் குடும்ப மகிழ்ச்சி, நிதிநிலையில் முன்னேற்றம், தொழிலில் வளர்ச்சி உள்ளிட்ட சாதகமான பலன்கள் கிடைக்கக்கூடும். குறிப்பாக மேஷம், கடகம், கன்னி, துலாம் ஆகிய நான்கு ராசிகளுக்கு என்னென்ன வாய்ப்புகள் காத்திருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

**சூரியன்சுக்கிரன் சேர்க்கையின் சிறப்பு என்ன?**

ஜோதிட நம்பிக்கையின்படி, சுக்கிரன் செல்வம், சொத்து, இன்பம், திருமண மகிழ்ச்சி, ஆடம்பரம் ஆகியவற்றின் காரகனாகக் கருதப்படுகிறார். சூரியன் ஆற்றல், ஆன்மா, தந்தை, தலைமைத்துவம் ஆகியவற்றைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இரு கிரகங்களின் சேர்க்கையால் உருவாகும் சுக்கிராதித்ய யோகம், சமூக அந்தஸ்து உயர்வு, கலைத்திறன் வெளிப்பாடு, பொருளாதார முன்னேற்றம் போன்றவற்றுக்குச் சாதகமாக அமையக்கூடும் என இந்தக் கட்டுரையின் ஜோதிடக் கணிப்பு தெரிவிக்கிறது.

**மேஷம்: புதிய பொறுப்புகள்... பழைய முதலீடுகளால் வருமான வாய்ப்பு!**

மேஷ ராசியினருக்குச் சூரியன்சுக்கிரன் சேர்க்கை, பணிகளில் புதிய பொறுப்புகளையும் அவற்றின் மூலம் முன்னேற்றத்தையும் தரக்கூடும். பணியிடத்தில் உங்களுக்கெனத் தனி அடையாளத்தை உருவாக்கிக்கொள்ளும் வாய்ப்பு அமையலாம்.

முன்பு செய்த முதலீடுகள் மூலம் வருமானம் அதிகரிக்கக்கூடும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருக்கும் பணிகளைச் சரியாக முடிக்க வாய்ப்புகள் உருவாகலாம்.

தொழில் மற்றும் வணிகத்தில் கூட்டாகச் செயல்படுவது நல்ல பலனைத் தரக்கூடும். செல்வாக்கு மிக்க நபர்களின் தொடர்பும் ஆதரவும் கிடைக்கலாம். குடும்பத்திலும் மகிழ்ச்சி நிறைந்த சூழல் நிலவக்கூடும்.

கவனம் ஈர்க்கும் பலன்கள்: புதிய பொறுப்புகள், பணியிட முன்னேற்றம், முதலீட்டு வருமானம், கூட்டுத் தொழிலில் சாதகம், குடும்ப மகிழ்ச்சி.

**கடகம்: ஆசைகள் நிறைவேறுமா? உழைப்புக்குக் கிடைக்கும் அங்கீகாரம்!**

கடக ராசியினரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நேர்மறையான மாற்றங்களைச் சுக்கிராதித்ய யோகம் ஏற்படுத்தக்கூடும். மனதிற்கு நெருக்கமான ஆசைகள் நிறைவேறும் வாய்ப்பு அமையலாம்.

குடும்பத்தினரின் முழு ஒத்துழைப்பு கிடைப்பதால் முக்கியமான வேலைகளைத் திட்டமிட்டபடி செய்து முடிக்க முடியும் எனக் கணிக்கப்படுகிறது.

பணியிடத்தில் கடின உழைப்பிற்கான அங்கீகாரம் கிடைக்கலாம். சக ஊழியர்கள் மற்றும் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவதற்கும் வாய்ப்புகள் உண்டு.



நிதி தொடர்பான திட்டங்கள் வெற்றியையும் லாபத்தையும் தரக்கூடும். உங்களைத் தேடி வரும் நல்ல செய்திகள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தலாம்.

கவனம் ஈர்க்கும் பலன்கள்: ஆசைகள் நிறைவேறுதல், குடும்ப ஆதரவு, உழைப்புக்குப் பாராட்டு, நிதித் திட்டங்களில் சாதகம், மகிழ்ச்சியான செய்திகள்.

**கன்னி: தனவரவு அதிகரிக்கும் வாய்ப்பு... பதவி உயர்வும் கைகூடுமா?**

கன்னி ராசியினரின் தன ஸ்தானத்தில் உருவாகும் 'சுக்கிராதித்ய ராஜயோகம்', நிதிநிலை மற்றும் தொழில் முன்னேற்றத்திற்குச் சாதகமாக அமையக்கூடும் எனக் கூறப்படுகிறது.

பழைய முயற்சிகள் அல்லது முதலீடுகள் மூலம் பணவரவு அதிகரிக்கலாம். வணிகத்தில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் வாய்ப்பும் உருவாகலாம்.

வேலைகளைச் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பீர்கள். பணியிடத்தில் தலைமைப் பண்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகள் கிடைக்கக்கூடும். சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம்.

கடினமான பணிகளைக்கூட உழைப்பின் மூலம் உரிய நேரத்தில் முடிப்பதற்கான சூழல் அமையக்கூடும்.

கவனம் ஈர்க்கும் பலன்கள்: பணவரவு, புதிய வணிக ஒப்பந்தங்கள், தலைமைத்துவ வாய்ப்புகள், பதவி உயர்வு, பணிகளை முடிப்பதில் முன்னேற்றம்.

**துலாம்: தொழிலில் புதிய மைல்கல்... செல்வாக்கு அதிகரிக்கும் வாய்ப்பு!**

துலாம் ராசியினருக்குச் சூரியன்சுக்கிரன் சேர்க்கை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. தொழில் வாழ்க்கையில் புதிய மைல்கல்லை எட்டுவதற்கான வாய்ப்புகள் அமையலாம். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குப் புதிய பதவி அல்லது முக்கியமான திட்டங்களுக்கான பொறுப்புகள் வழங்கப்படக்கூடும். செல்வாக்கு மிக்க நபர்களின் தொடர்புகள் கிடைப்பது தொழில் முன்னேற்றத்திற்கு உதவலாம்.

சமூகப் பணிகளில் ஆர்வம் அதிகரிக்கக்கூடும். துணிச்சலான செயல்பாடுகள் நல்ல முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல உத்வேகம் தரலாம்.

நிதிநிலையிலும் நேர்மறையான மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என ஜோதிடக் கணிப்பு தெரிவிக்கிறது.

கவனம் ஈர்க்கும் பலன்கள்: தொழில் வளர்ச்சி, புதிய பதவி அல்லது பொறுப்பு, செல்வாக்கு மிக்க தொடர்புகள், சமூகப் பணிகளில் ஈடுபாடு, நிதிநிலையில் சாதகமான மாற்றங்கள்.

**பொறுப்புத் துறப்பு:** இவை ஜோதிட நம்பிக்கைகளின் அடிப்படையிலான பொதுவான கணிப்புகள். இத்தகவல்கள் முற்றிலும் உண்மையானவை அல்லது துல்லியமானவை என உறுதிப்படுத்தப்படவில்லை. விரிவான விளக்கங்களுக்கு சம்பந்தப்பட்ட துறை நிபுணரை அணுகவும்.

## அரசு நிறுவனங்களுக்கும் 'ஆன்லைன்' முறையில் பத்திரப்பதிவு மேற்கொள்ள அனுமதி!



சென்னை, அக். 08–

வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவையும் நிலம், கட்டிடம் தொடர்பான பத்திரங்களை 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

தமிழகத்தில் வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களும், 'ஆன்லைன்' முறையில் பத்திரப்பதிவு மேற்கொள்ள பதிவுத்துறை அனுமதி வழங்கியுள்ளது. தமிழகத்தில் புதிய திட்டங்களின் கீழ் வீடு, மனை விற்பனைக்கான பத்திரங்களை, சார்பதிவாளர் அலுவலகத்துக்கு நேரில் செல்லாமல் பதிவு செய்யும் வசதி கடந்த ஆகஸ்டு 17–ந்தேதி தொடங்கப்பட்டது. இந்த வசதியில் கட்டுமான நிறுவனங்கள், ரியல் எஸ்டேட் மேம்பாட்டாளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு மட்டுமே நுழைவு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வீட்டுவசதி வாரியம் உள்ளிட்ட அரசு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படாததால், அவை பழைய நடைமுறையிலேயே பத்திரப்பதிவு மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில், பதிவுத்துறை தலைவர் அருண்சுந்தர் தயாளன் பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

வீட்டுவசதி வாரியம், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவையும் நிலம், கட்டிடம் தொடர்பான பத்திரங்களை 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

இதற்காக பதிவுத்துறையை தொடர்பு கொண்டு, 'லாக்–இன்' எனப்படும் நுழைவு அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தொடர் உரிமை ஒப்படைப்பு ஆவணங்களையும் 'ஆன்லைன்' முறையில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

## 'வெற்றிப்பயணம்': ஆண்களுக்கு கட்டணம் குறைப்பு!



சென்னை, அக். 08–

பெண்கள் கட்டணமில்லா பதமிழகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் 'மகளிர் விடியல் பயணம்' என்ற பெயரில் அரசு டவுன் பஸ்களில் பெண்களுக்கு இலவச பயண திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த நிலையில் த.வெ.க. தலைவர் விஜய் கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது, புறநகர் பஸ்களிலும் பெண்களுக்கு இலவச பயண அனுமதி வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

பின்னர் த.வெ.க. ஆட்சியை பிடித்து விஜய் முதல்–அமைச்சரானார். தொடர்ந்து கடந்த 2–ந்தேதி காந்தி ஜெயந்தி விழாவை யொட்டி, தமிழகத்தில் புறநகர் பஸ்களிலும் மகளிர் இலவசமாக பயணிக்கும் வகையில் 'வெற்றிப் பயணம்' திட்டத்தை முதல்–அமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார். இது பெண்களிடையே பெரும் வரவேற்பை பெற்று ள்ளது.

இந்த நிலையில் மகளிர் இலவசமாக பயணம் செய்யும் பஸ்களில் ஆண்களுக்கும் கட்டண சலுகை கிடைத்துள்ளது. இது ஆண் பயணிகளிடையே இன்ப அதிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. அதன்படி நெல்லை–திருச்செந்தூர் இடையே முன்பு ரூ.50 கட்டணம் வசூலிக்கப்பட்டது. அது தற்போது ரூ.38 ஆக குறைக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று நெல்லை–தூத்துக்குடி இடையே இடைநில்லா எண்ட் டு எண்ட் பஸ்களில் டிக்கெட் கட்டணம் ரூ.50 ஆக குறைக்கப்பட்டு உள்ளது. எக்ஸ்பிரஸ் பஸ்களில் ரூ.40–ம், சாதாரண பஸ்களில் ரூ.35 கட்டணம் வசூலிக்கப்படு கிறது.

விழுப்புரம் கோட்டம் வேலூர் மண்டலம் சார்பில் வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை மாவட்டங்களில் வெற்றிப்பயணம் திட்டத்தின் கீழ் இயக்கப்படும் 128 பஸ்கள் சாதாரண பஸ்களாக மாற்றப்பட்டுள்ளதால், திருவண்ணாமலை மாவட்டத்தில் வெற்றிப்பயணம் பஸ்களில் ஆண்களுக்கு 10 ரூபாயாக இருந்த டிக்கெட் கட்டணம் 7 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் களியக்காவிளை, மார்த்தாண்டம், கன்னியாகுமரி போன்ற பல்வேறு வழித்தடங்களில் இயக்கப்பட்டு வரும் பஸ்களில் டிக்கெட் கட்டணம் குறைந்துள்ளது. 65 பஸ்களில் ஆண்களுக்கும் டிக்கெட் கட்டணம் குறைந்துள்ளது.

திருச்சி கோட்டத்தில் 43 எக்ஸ்பிரஸ் பஸ்கள் சாதாரண கட் டண பஸ்களாக மாற்றப்பட்டுள்ளது. திருச்சியில் இருந்து துறையூருக்கு வழக்கமாக எக்ஸ்பிரஸ் பஸ்சாக இயக்கும்போது ரூ.40 கட்டணம் வசூலிக்கப்பட்டது. 'வெற்றிப் பயணம்' திட்டத்தில் ஆண்களுக்கு ரூ.30 மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

இதுகுறித்து நெல்லை அரசு போக்குவரத்து கழக அதிகாரிகள் கூறுகையில், "அரசு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை இடைநில்லா பஸ்கள், எக்ஸ்பிரஸ் பஸ்கள், சாதாரண பஸ்கள் மற்றும் தாழ்தள சொகுசு பஸ், டவுன் பஸ்கள் என இயக்கப்படுகின்றன. இதில் பெண்களுக்கு வெற்றிப் பயண திட்டத்தின் கீழ் இலவச பயண வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்போது சாதாரண பஸ்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது.

எனவே, அந்த பஸ்களின் எண்ணிக்கையை உயர்த்தும் நோக்கில், பல்வேறு எக்ஸ்பிரஸ் பஸ்களை சாதாரண பஸ்களாக வகை மாற்றம் செய்தோம். அந்த வகையில் நெல்லை மாவட்டத்தில் மட்டும் சாதாரண பஸ்களின் எண்ணிக்கை 70–ல் இருந்து 100 ஆக உயர்த்தப்பட்டு உள்ளது. இவ்வாறு சாதாரண பஸ்களாக மாற்றப்பட்ட பஸ்களில் கட்டண விகிதாசாரமும் குறைந்து உள்ளது. ஆனால் இடைநில்லா பஸ், எக்ஸ்பிரஸ் பஸ்களில் கட்டணம் குறையாமல் அதே நிலையில் உள்ளது" என்றனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# மீதமான சாதத்தைச் சூடுபடுத்திச் சாப்பிடலாமா?



சமைத்த சாதத்தை மீண்டும் சூடுபடுத்திச் சாப்பிடுவது பல வீடுகளில் வழக்கமாக உள்ளது. ஆனால், சாதத்தைச் சரியாகச் சேமிக்காமல் நீண்ட நேரம் அறை வெப்பநிலையில் வைத்திருப்பது உணவு நஞ்சாதலுக்கு வழிவகுக்கலாம் என உணவுப் பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

அரிசியில் இயற்கையாகக் காணப்படும் 'பேசில்லஸ் செரியஸ்' பாக்டீரியாவின் சில வித்துக்கள் சமைத்த பின்னரும் உயிருடன் இருக்கக்கூடும். சாதத்தை நீண்ட நேரம் வெளியே வைத்தால், அவை பெருகி நச்சுப் பொருட்களை உருவாக்கலாம். சில நச்சுகள் அதிக வெப்பத்தையும் தாங்குவதால், மீண்டும் சூடுபடுத்துவது பாதுகாப்பை உறுதிப்படுத்தாது. இதனால் வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுப்பிடிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படலாம்.

எனவே, மீதமான சாதத்தை நீண்ட நேரம் வெளியே வைக்காமல் விரைவாகக் குளிரவைத்து ஃபிரிட்ஜில் சேமிக்க வேண்டும். பெரிய பாத்திரத்தில் மொத்தமாக வைப்பதைவிட, ஆழம் குறைந்த சிறிய பாத்திரங்களில் பிரித்து வைத்தால் விரைவில் குளிரும்.

சாப்பிடும்போது தேவையான அளவை மட்டும் வெளியே எடுத்து, அனைத்துப் பகுதிகளிலும் ஆவி பறக்கும் அளவுக்கு ஒருமுறை சூடுபடுத்தவும். மீண்டும் மீண்டும் சூடுபடுத்துவதையும், மொத்தச் சாதத்தையும் அடிக்கடி வெளியே எடுத்து வைப்பதையும் தவிர்க்கவும். மீதமான சாதத்தை எலுமிச்சை சாதமாகவோ ஃபிரைடு ரைஸாகவோ மாற்றினாலும், தவறான சேமிப்பால் உருவான நச்சுகள் நீங்கிவிடும் என்று கருதக்கூடாது. சாதத்தின் பாதுகாப்பை நிர்ணயிப்பது சூடுபடுத்துதல் மட்டுமல்ல; சமைத்த பிறகு கையாளும் முறையும் சேமிக்கும் முறையும்தான். சரியான சேமிப்பும் முறையான சூடுபடுத்துதலும் உணவு நஞ்சாதல் அபாயத்தைக் குறைக்க உதவும்.இந்த முன்னெச்சரிக்கைகளை அனைவரும் பின்பற்றுவது அவசியம்.



## சினிமா துளிகள்..!

# பிரபல நடிகர் நானா படேகர் காலமானார்!



பிரபல பாலிவுட் மற்றும் மராத்தி நடிகர் நானா படேகர் இன்று (அக்.8) கோவாவில் அதிகாலை 5:20 மணிக்கு அவர் காலமானதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்

அவருக்கு வயது 75. வீட்டில் மயங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட அவர், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டது. ஐந்து தசாப்தங்களாகத் திரையுலகில் சாதித்த அவர், மூன்று தேசிய விருதுகளையும் பத்மஸ்ரீ விருதையும் பெற்றவர்.

# அடுத்த வாரம் தொடங்குகிறது தனுஷின் 'டி56' படப்பிடிப்பு!



'டி56' படத்தின் பூஜை கடந்த செப்டம்பர் 25–ந்தேதி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாரநாடு கருப்பணசாமி கோவிலில் நடைபெற்றது. இதில் நடிகர் தனுஷ் உள்ளிட்ட படக்குழுவினர் கலந்து கொண்டனர். படம் வெற்றி பெற வேண்டி மாரநாடு கருப்பணசாமிக்கு தனுஷ் 18 அடி நீளமுள்ள அரிவாளை காணிக்கையாக வழங்கினார். மேலும், நிகழ்ச்சியை முன்னிட்டு 16 கிடாக்கள் வெட்டி ரசிகர்களுக்கு விருந்து வழங்கப்பட்டது. பூஜை தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தன. இந்த நிலையில், 'டி56' படத்தின் படப்பிடிப்பு தொடர்பான புதிய தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்தின் படப்பிடிப்பை அடுத்த வாரம் முதல் சென்னையில் தொடங்க படக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.மதுரையை பின்னணியாகக் கொண்ட கதைக்களம் என்பதால், அடுத்தகட்ட படப்பிடிப்பு மதுரை உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறுமா என்ற எதிர்பார்ப்பும் ரசிகர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

# கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு: சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை!



பெரியகுளம், அக். 08–

கொடைக்கானல் வனப்பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால், கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு நீடித்து வருவதால், பாதுகாப்பு கருதி 2–வது நாளாக சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. அருவிப்பகுதிக்குள் சுற்றுலா பயணிகள் செல்லாத வகையில் நுழைவு பகுதியில் உள்ள இரும்பு கதவு பூட்டப்பட்டது. இதனால் கும்பக்கரை அருவிக்கு வந்த சுற்றுலா பயணிகள் குளிக்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பி செல்கின்றனர்.

# விமானத்தைத் தாக்கிய மின்னல்: 110 பேர் பாதுகாப்பு!



பாட்னாவிலிருந்து லக்னோ சென்ற இண்டிகோ விமானத்தை, 17 ஆயிரம் அடி உயரத்தில் மின்னல் தாக்கியது. முன்பகுதி ரேடோம் சேதமடைந்தபோதிலும், 104 பயணிகள் மற்றும் ஆறு பணியாளர்களுடன் விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியது. விமானம் தொழில்நுட்ப ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. அவசரத் தரையிறக்கம் மேற்கொள்ளப்படவில்லை; வழக்கமான நடைமுறையிலேயே தரையிறங்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் ஐடி ஊழியர்களைத் தொடர்ந்து மாணவர்களுக்கும் கெடுபிடி!



புதுடெல்லி, அக். 08–

வெளி நாட்டு மாணவர்கள் படிப்புக்குப் பின் வேலைப்பயிற்சி பெறும் OPT திட்டத்தின் முதல் விண்ணப்பத்திற்கு 70,000 டாலர், சுமார் ரூ.67 லட்சம் கட்டணம் விதிக்க அமெரிக்க நிர்வாகம் முன்மொழிந்துள்ளதாகச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இதைக் கல்வி நிறுவனங்கள் செலுத்த வேண்டும் என்றும், புதுப்பித்தலுக்கு 30,000 டாலர் கட்டணம் பரிந்துரைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முன்மொழிவு இன்னும் நடைமுறைக்கு வரவில்லை; பொதுமக்கள் கருத்து தெரிவிக்க 60 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# ஊழல் குற்றச்சாட்டு: ராஜபக்சே மனைவி கைது?



இலங்கை, அக். 08–

இலங்கை முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சேவின் மனைவி சிராந்தி, ஊழல் மற்றும் நிதி முறைகேடு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு ள்ளதாக நக்கீரன் செய்தி வெளியிட்டுள்ளது.

அரசுக்குச் சொந்தமான வங்கியிலிருந்து பெற்ற ஒரு கோடி இலங்கை ரூபாயை முறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் விசாரணை நடத்திய அதிகாரிகள், பின்னர் அவரைக் கைது செய்ததாகச் செய்தியில் தெரிவிக்கப்பட்டு ள்ளது. ராஜ பக்சே குடும்பத்தினர் மீதான விசாரணைகள் தொடரும் நிலை யில், இந்தச் சம்பவம் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஹெச்1பி விசா.. இனி சின்ன தவறு செய்தாலும் ரூ.2.4 கோடி அபராதம்!



புதுடெல்லி, அக். 08–

ஹெச்–1பி விசா திட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கான தண்டனையைக் கடுமையாக்கும் மசோதா, அமெரிக்க நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாகத் தகவல் வெளியாகியுள்ளது.

'H–1B Visa Fraud Crackdown Act' என்ற இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், விதிமீறும் நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக 2.5 லட்சம் டாலர், அதாவது சுமார் ரூ.2.4 கோடி அபராதம் விதிக்க வழிவகை ஏற்படும். மேலும், குடியேற்றச் சேவைகளைப் பெறுவதற்கான தடைக்காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து பத்து ஆண்டுகளாக நீட்டிக்கவும் முன்மொழியப்பட்டு ள்ளது. அமெரிக்கர்களின் வேலை வாய்ப்பைப் பாதுகாப்பதே நடவடிக்கையின் நோக்கம் எனக் கூறப்படுகிறது. இந்த மாற்றங்கள் மசோதாவில் இடம்பெற்றுள்ள முன்மொழிவுகள்; நடைமுறைக்கு வந்த விதிகளாகச் செய்தியில் குறிப்பிடப்படவில்லை.

# யூபிஐ மூலம் பிஎஃப் பணம்: டிசம்பரில் அறிமுகமாக வாய்ப்பு!



புதுடெல்லி, அக். 08–

வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள், அனுமதிக்கப்பட்ட பிஎஃப் தொகையை யூபிஐ மூலம் வங்கிக் கணக்கிற்கு மாற்றும் வசதிக்காக ஈபிஎஃப்ஓ சோதனைகளைத் தொடங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. முக்கிய வங்கிகளுடன் இணைந்து நடைபெறும் சோதனைகள் வெற்றியடைந்தால், இந்த ஆண்டு டிசம்பருக்குள் சேவை அறிமுகமாகலாம் எனக் கூறப்படுகிறது. தற்போது பிஎஃப் பணத்தைப் பெற இணையத்தில் விண்ணப்பித்து, ஒப்புதலுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளது. புதிய வசதி நடைமுறைக்கு வந்தால், பணம் பெறும் செயல்முறை எளிதாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஈபிஎஃப்ஓவின் தொழில்நுட்ப மேம்பாட்டுத் திட்டமான 'EPFO 3.0'இன் ஒரு பகுதியாக இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பணம் எடுப்பதற்கான வரம்பு, தகுதி மற்றும் சந்தாதாரர்கள் புதுப்பிக்க வேண்டிய விவரங்கள் குறித்த வழிகாட்டுதல்கள் பின்னர் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசரத் தேவைகளுக்கு விரைவாகப் பணம் பெற இந்த வசதி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், சேவை தொடங்கும் அதிகாரப்பூர்வ தேதி மற்றும் இறுதி நடைமுறைகள் குறித்த அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை எனச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# உயர்கிறது மொபைல் ரீசார்ஜ் கட்டணங்கள்?



புதுடெல்லி, அக். 08–

இந்தியாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனங்களான ஜியோ, ஏர்டெல் மற்றும் வோடபோன் ஐடியா, அடுத்த நான்கு முதல் ஐந்து மாதங்களில் மொபைல் ரீசார்ஜ் கட்டணங்களை உயர்த்தக்கூடும் என சென்ட்ரம் ஆய்வறிக்கை கணித்துள்ளது. கட்டணங்கள் 12 முதல் 15 சதவீதம் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி, தற்போது ரூ.300 செலுத்தும் வாடிக்கையாளர்கள், உயர்வுக்குப் பிறகு ரூ.336 முதல் ரூ.345 வரை செலுத்த வேண்டியிருக்கலாம். இந்த மாற்றம் அமலானால், ப்ரீபெய்ட் மற்றும் போஸ்ட்பெய்ட் பயனர்களின் மாதாந்திர செலவு அதிகரிக்கும். நிறுவனங்களின் வருவாயும் உயரும் என அறிக்கை தெரிவிக்கிறது. இருப்பினும், கட்டண உயர்வு மற்றும் அமல்படுத்தப்படும் தேதி குறித்து நிறுவனங்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை எனச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. எனவே, இது ஆய்வறிக்கையின் எதிர்பார்ப்பாகவே உள்ளது. இறுதி கட்டண விவரங்கள் நிறுவனங்களின் அறிவிப்புக்குப் பின்னரே தெரியவரும். டேட்டா மற்றும் அழைப்புச் சேவைகளுக்கான கூடுதல் செலவு, பயனர்களின் குடும்பச் செலவுத் திட்டத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ராசிபுரத்தில் போலி ஆவணங்கள் மூலம் மின் இணைப்பு: விசாரணை கோரி புகார்!




நாமக்கல், அக். 08–

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் நகராட்சி ஆணையரின் கையெழுத்து, முத்திரையைப் போலியாகப் பயன்படுத்தி கட்டிடங்களுக்கு மின் இணைப்புகள் பெற்றதாக, பத்து ரூபாய் இயக்கப் பொதுச்செயலாளர் நல்வினை விசுவராஜ் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். சம்பந்தப்பட்டவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கக் கோரினார்.

# கீழக்கரையில் பழுதடைந்த தெருவிளக்குகள்: சீரமைக்க மக்கள் கோரிக்கை!



கீழக்கரை, அக். 08–

ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை 15–வது வார்டில் ஹைமாஸ் மற்றும் தெருவிளக்குகள் பழுதடைந்துள்ளதால், இரவில் பொதுமக்கள் அவதிப்படுகின்றனர். பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை எனக் கூறும் மக்கள், விளக்குகளை உடனடியாகச் சீரமைக்கவும், மாவட்ட நிர்வாகம் நகராட்சியை ஆய்வு செய்யவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## டிஎன்பிஎஸ்சி குரூப்4: 6,574 பணியிடங்கள்!




தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்4 தேர்வு மூலம் 6,574 நிரந்தரப் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளதாக அறிவிப்பு விவரங்கள் தெரிவிக்கின்றன.

பணியிடம்: தமிழ்நாடு
விண்ணப்பத் தொடக்கம்: 06.10.2026
கடைசி நாள்: 05.11.2026, இரவு 11.59 மணி
விண்ணப்ப முறை: ஆன்லைன்
இணையதளம்: www.tnpsc.gov.in

கல்வித்தகுதி, வயது வரம்பு, சம்பளம், கட்டணம் மற்றும் தேர்வு விவரங்களை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பார்த்து விண்ணப்பிக்கவும்.

# ராமநாதபுரம் மேல்வலசைகாஞ்சிரங்குடியில் 266-வது ஆண்டு எருதுகட்டு விழா!



ராமநாதபுரம், அக். 08–

ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம் மேலவலசை காஞ்சிரங்குடியில் உள்ள பொன்னும்சிறை எடுத்த அய்யனார் கோவில் திருவிழாவையொட்டி, 266–வது ஆண்டு பாரம்பரிய எருதுகட்டு விழா விமரிசையாக நடைபெற்றது. சுற்றுவட்டாரப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட காளைகளை இளைஞர்கள் அடக்கி வீரத்தை வெளிப்படுத்தினர். ஏராளமான பொதுமக்கள் விழாவைக் கண்டு ரசித்தனர்.

# ஒட்டன்சத்திரம் அரசு தலைமை மருத்துவமனையில் அமைச்சர் டாக்டர் கே.ஜி.அருண்ராஜ் பார்வையிட்டு ஆய்வு



ஒட்டன்சத்திரம், அக். 8–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அரசு தலைமை மருத்துவமனையில் தமிழக மருத்துவம் மற்றும் மருத்துவக் கல்வி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.கே.ஜி. அருண்ராஜ் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவமனையின் அடிப்படை வசதிகள், மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களின் வருகைப் பதிவு, மருந்துகளின் இருப்பு மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை குறித்து அவர் ஆய்வு செய்தார். மேலும், டெங்கு தனி வார்டு, கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகளையும் பார்வையிட்டார்.

தொடர்ந்து நோயாளிகளை நேரில் சந்தித்து சிகிச்சை மற்றும் மருத்துவமனை வசதிகள் குறித்து கேட்டறிந்த அமைச்சர், மருத்துவ சேவைகளை தாமதமின்றி வழங்கவும், மருத்துவமனை வளாகத்தை சுகாதாரமாக பராமரிக்கவும் மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குனர் டாக்டர் பாரதி, மருத்துவமனை தலைமை மருத்துவர் கருப்புசாமி உள்ளிட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் உடனிருந்தனர். நிகழ்வில் த.வெ.க ஒட்டன்சத்திரம் நகர செயலாளர் எம்.குருஅருண், ஒட்டன்சத்திரம் தொகுதி த.வெ.க ஜெ.கண்ணாயிரம், ஒன்றிய செயலாளர் எம்.சுறாசுரேஷ், பாலசுப்பிரமணியம், குணசேகரன் மற்றும் தினேஷ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# ஆசிய போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு விருந்து அளிக்கிறார் முதலமைச்சர் விஜய்!

சென்னை, அக். 08–

ஜப்பானில் நடந்த 20–வது ஆசிய விளையாட்டு போட்டிக்கு இந்தியா 495 பேர் கொண்ட படையை அனுப்பியது. அவர்கள் 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலம் என மொத்தம் 85 பதக்கங்களை வென்று 4–வது இடத்தை பிடித்திருக்கிறார்கள். அதிகபட்சமாக தடகளத்தில் ஒரு தங்கம் உள்பட 24 பதக்கமும், துப்பாக்கி சுடுதலில் 3 தங்கம் உள்பட 15 பதக்கமும், வில்வித்தையில் 5 தங்கம் உள்பட 9 பதக்கமும் கிடைத்தது. தமிழக தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் உள்பட 5 பேர் தலா 3 பதக்கங்களும், தமிழகத்தின் வேலவன் செந்தில்குமார், ஜோஷ்னா சின்னப்பா (ஸ்குவாஷ்), விஷால் டி.கே. (தடகளம்), கணேஷ் மணிரத்னம் (வில் வித்தை) உள்பட 23 பேர் தலா 2 பதக்கங்களுடன் வென்றுள்ளனர்.



ஆசிய விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழக வீரர்களுக்கு அரசு சார்பில் பரிசுத் தொகைகளை முதலமைச்சர் விஜய் உடனுக்குடன் அறிவித்தார். இந்நிலையில் ஆசிய போட்டியில் வென்ற தமிழக வீரர்– வீராங்கனை களுக்கு முதலமைச்சர் விஜய் இன்று விருந்து அளிக்கிறார்.

இந்த நிகழ்வில் கிரிக்கெட் வீரர்கள் வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர், கமலினி, தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ், ராஜேஷ் ரமேஷ், பரணிகா இளங்கோவன், அபிநயா ராஜராஜன், ஸ்குவாஷ் வீராங்கனை ஜோஸ்னா சின்னப்பா, வேலவன் செந்தில்குமார் உள்ளிட்ட 35 தமிழக வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

அத்துடன், சாமர்கண்ட் நகரில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் வெற்றி வாகை சூடிய பிரக்ஞானந்தா, குகேஷ், திவ்யா தேஷ்முக் ஆகியோரும் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொள்கின்றனர். இவர்களுக்காக அறிவிக்கப்பட்ட ஊக்கத்தொகையை முதலமைச்சர் விஜய் வழங்கி கவுரவிக்கிறார்.

சென்னையில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் இன்று மாலை 5 மணிக்கு ஊக்கத்தொகையுடன் விருந்தளிக்கப்பட உள்ளது. செஸ் ஒலிம்பியாட் வெற்றியாளர்களுக்கும் ஊக்கத்தொகையுடன் விருந்து அளிக்கப்படுகிறது.

# ராமேசுவரம் கோவில் நடை திறப்பில் மாற்றம்!

ராமேசுவரம், அக். 08–

ராமேசுவரம் கோவிலில் நவராத்திரி திருவிழா நாளை மறுநாள் மகாளய அமாவாசையுடன் தொடங்குகிறது. கோவில் நடை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடைபெறும். பகல் 1 மணிக்கு நடை மூடப்பட்டு, மாலை 3 மணிக்கு மீண்டும் திறக்கப்படும். இரவில் அம்பாள் வெள்ளி ரதத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சியும் வெள்ளி தேரோட்டமும் நடைபெறும். ராமநாதசாமி கோவிலில் ஆண்டுதோறும் நவராத்திரி திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு நவராத்திரி திருவிழா நாளை மறுநாள் (சனிக்கிழமை) மகாளய அமாவாசை அன்று காப்பு கட்டுதலுடன் தொடங்குகிறது. விழாவில் முதல் நாளான வருகிற 11–ந்தேதி அம்பாள் முத்தங்கி சேவையிலும் தொடர்ந்து அன்னபூரணி, மகாலட்சுமி, சிவதுர்க்கை, சரஸ்வதி, கவுரி சிவ பூஜை, சாரதா அம்பிகை, கஜலட்சுமி, மகிஷாசுரமர்த்தினி உள்ளிட்ட பல்வேறு அவதாரங்களில் கொலுமண்டபத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சி நடக்கிறது.

தொடர்ந்து திருவிழாவின் கடைசி நாளான வருகிற 21–ந்தேதி கோவிலில் இருந்து சுவாமி– அம்பாள் பஞ்சமூர்த்திகளுடன் எழுந்தருளி பத்ரகாளியம்மன் கோவில் அருகே உள்ள மகரநோன்பு திடலில் அம்புஎய்தல் நிகழ்ச்சி நடக்கிறது. திருவிழா ஏற்பாடுகளை கோவில் இணை ஆணையர் சுரேஷ் தலைமையில் உதவி ஆணையர் ரவீந்திரன் உள்ளிட்ட கோவில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

புரட்டாசி மாத மகாளய அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரம் கோவில் நடையானது நாளை மறுநாள் அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டு 5 மணி முதல் 5.30 மணி வரை படிகலிங்க தரிசன பூஜை நடைபெறும் என்றும், பின்னர் திருவனந்தல் பூஜையும், காலை 6 மணிக்கு பிறகு வழக்கமான பூஜைகள் நடைபெறும் என்றும் கோவில் நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வழக்கம்போல் பகல் 1 மணிக்கு கோவில் நடை சாத்தப்பட்டு பின்னர் 3 மணிக்கு நடை திறக்கப்படும் என்றும், இரவு 8 மணிக்கு அம்பாள் வெள்ளி ரதத்தில் எழுந்தருளும் நிகழ்ச்சியும் நடைபெற்று வெள்ளி தேரோட்டம் முடிந்த பின்னர் கோவில் நடையானது வழக்கம் போல் சாத்தப்படும் என்றும் கோவில் இணை ஆணையர் சுரேஷ் தெரிவித்தார்.

# இந்தியாவுக்காக மட்டும். ஹார்முஸுக்கு மாற்றுப் பாதை:



வாஷிங்டன், அக். 08–

இந்திய நிறுவனங்களை ஈர்க்கும் நோக்கில், கார்ஃபக்கான் துறைமுகத்தை 2 பில்லியன் டாலர் செலவில் விரிவாக்க ஷார்ஜா திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஹார்முஸ் நீரிணைக்கு வெளியே அமைந்துள்ள இத்துறைமுகம், இந்தியா ஐக்கிய அரபு எமிரேட்ஸ் வர்த்தகத்துக்கு மாற்று நுழைவாயிலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்திய உற்பத்தி மற்றும் சரக்குப் போக்குவரத்து நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஆண்டுகளில் 3 பில்லியன் டாலர் முதலீட்டை ஈர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டு தலா 1.5 பில்லியன் டாலர் இந்திய முதலீட்டை எதிர்பார்ப்பதாக ஷார்ஜா முதலீட்டு அலுவலகத் தலைமைச் செயல் அதிகாரி முகமது ஜுமா அல் முஷ்ரக் தெரிவித்துள்ளதாகச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# ஹேமந்த் சோரனின் தாயார் ரூபி சோரன் காலமானார்!



ஜார்க்கண்ட், அக். 08–

ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரனின் தாயார் ரூபி சோரன் (80), புதன்கிழமை நள்ளிரவு காலமானார். முன்னாள் முதல்வர் ஷிபு சோரனின் மனைவியான இவர், உடல்நலக்குறைவால் ஹைதராபாத்தில் சிகிச்சை பெற்று, உடல்நிலை மேம்பட்டதைத் தொடர்ந்து ராஞ்சி திரும்பியிருந்தார்.

# இறுதிக்கட்டத்தை எட்டிய ககன்யான் திட்டம்...!

பெங்களூரு, அக். 08–

இறுதிக்கட்டத்தை ககன்யான் திட்டம் எட்டி உள்ளது.



இஸ்ரோ' எனப்படும், இந்திய விண்வெளி ஆய்வு மையம், வரும் 2027ல் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும், 'ககன்யான்' திட்டத்தை செயல்படுத்த இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காக, நான்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். விண்வெளியில் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது தொடர்பான பயிற்சிகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரோ மற்றும் இந்திய விமானப்படையின் ஏரோஸ்பேஸ் மருத்துவ நிறுவனம், கர்நாடகாவின் பெங்களூரைச் சேர்ந்த புரோட்டோ பிளானட் என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் இணைந்து இத்திட்டத்தை வடிவமைத்துள்ளன. இந்தநிலையில், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் இஸ்ரோவின் கனவு திட்டமான ககன்யான் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

முதல் ஆளில்லா பயணத்திற்கான பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. விண்வெளி வீரர்கள் அமரும் பகுதி தயாரிப்பு நிறைவு பெற்றுள்ளது. அக்டோபர் பிற்பகுதி முதல் நவம்பர் தொடக்கத்திற்குள் என்.வி. எஸ்–03 செயற்கைக்கோள் ஏவப்படலாம் . நான்கு விண்வெளி வீரர்கள் ஏற்கனவே தேர்வு செய்யப்பட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

# இளம் வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க 10-ந் தேதி சிறப்பு முகாம்!

சென்னை, அக். 08–

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:– சிறப்புத் தீவிரத் திருத்தப் பணி (எஸ்.ஐ.ஆர்.) நிறைவடைந்துள்ள மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில், இளம் மற்றும் முதல் முறை வாக்காளர்களாக தகுதி பெற்றவர்களை பதிவு செய்வதற்கான சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியத் தேர்தல் கமிஷன் அறிவுறு த்தியுள்ளது. இதுதொடர்பாக 29.9.2026 மற்றும் 1.10.2026 ஆகிய தேதிகளில் கடிதங்களை அனுப்பியுள்ளது. அதன்படி 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் (இன்று, நாளை) சிறப்பு நடவடிக்கைகளை தேர்தல் கமிஷன் மேற்கொள்கிறது. இளம் மற்றும் முதல்முறை வாக்காளர்களாக தகுதி பெற்றவர்களை வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்காக.



தேவைக்கேற்ப மாவட்டங்களில் சிறப்பு முகாம்கள் வரும் 10–ந் தேதி (சனிக்கிழமை) நடத்தப்படும். முதல்முறை மற்றும் இளம் வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதை அதிகரிக்கும் வகையில், நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் பெருநகரங்க ளுக்குச் சிறப்புக் கவனம் அளிக்கப்படும். மேலும், தகுதியுடைய இளம் மற்றும் முதல்முறை வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு வசதியாகவும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள தேர்தல் கல்வியறிவு குழுக்களின் சேவைகள் திறம்பட பயன்படுத்தப்படும். சிறப்பு இயக்கம் குறித்து ஊடகங்கள் மூலமாகவும், மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் அதிகாரப்பூர்வ சமூக ஊடகக் கணக்குகள் மூலமாகவும் பரவலான விளம்பரம் செய்யப்படும்.

சிறப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து கண்காணிப்பதற்கும், அறிவுறுத்தல்களைத் திறம்பட செயல்படுத்து வதை உறுதி செய்வதற்கும், வாக்காளர் பதிவு அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் தொடர்ந்து கூட்டங்களை நடத்துவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாம்கள்,இடைத்தேர்தல் நடந்து முடிந்துள்ள தாராபுரம் மற்றும் மதுராந்தகம் தொகுதியை உள்ளடக்கிய, முறையே திருப்பூர் மட்டும் செங்கல்பட்டு மாவட்டங்களில் நடைபெறாது என்று தேர்தல் கமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# நம்பி வாக்களித்த பெண்களுக்கு பாதுகாப்பில்லை - தவெகவை விமர்சித்த மேயர் பிரியா!

சென்னை, அக். 08–

தவெகவை நம்பி வாக்களித்த பெண்களுக்கு பாதுகாப்பில்லை என மேயர் பிரியா விமர்சித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக மகளிர் அணி சார்பில் முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் திமுக துணை பொதுச் செயலாளர் எம்.பி.கனிமொழி, கலாநிதி வீராசாமி, முன்னாள் எம்.பி அப்துல்லா, சென்னை மேயர் பிரியா, முன்னாள் சட்டமன்ற அமைச்சர் சேகர்பாபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய மேயர் பிரியா தவெக ஆட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து பேசியுள்ளார்.



இது தொடர்பாக அவர் பேசியதாவது:– முதல் – அமைச்சர் ஆனால் உங்கள் பையன் விஜி, உங்க அண்ணன் விஜி, உங்க தம்பி விஜி அப்டினு சொன்னாரு, ஆனால் தற்போது 7 வயது 8 வயது சிறுமிகள் எல்லாம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபடுகிறார்கள். அப்போது எங்க போனீங்க இந்த "சினிமாவில் வர மாதிரி நேப்பியர் பிரிட்ஜ் கீழ கயிறு கட்டி தொங்க விடுவாங்க" என நினைத்து உங்களுக்கு நம்பி வாக்களித்த மக்களுக்கு ஒரு சிறிய பாதுகாப்பு கூட இல்லை. குறிப்பாக, பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாத அளவுக்கு தமிழக அரசை நடத்தி வருகிறீர்கள். தவெக சட்டமன்ற உறுப்பினர் கீர்த்தனா வேறோரு நிகழ்ச்சியில் உரையாற்றிய போது ரீல்ஸ் போட்டு ஆட்சியை பிடித்து விட்டோம் என தெரிவித்ததாகவும், அதற்கு பதிலளிக்கும் வகையில் எங்களுக்கு ரீல்ஸ் போட வேண்டிய அவசியம் இல்லை. எங்களுக்கு தலைவர் இருக்காரு, அக்கா இருக்காங்க, சின்னவர் இருக்காரு எங்களுக்கு கொள்கை இருக்கு என விமர்சித்து பேசியுள்ளார்.

# கேரளத்தில் 3 நாட்களுக்கு இடி-மின்னலுடன் மழை: மஞ்சள் எச்சரிக்கை...!

திருவனந்தபுரம், அக். 08–

வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக கேரளம் மாநிலம் முழுவதும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை தீவிரமடைந்துள்ளதாக இந்திய வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வருகிற 10–ந்தேதி வரை இந்த மழை இருக்கும் என்றும் அப்போது காற்றின் வேகம் அதிகமாக இருக்கக்கூடும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.



இந்த மழையின் காரணமாக பத்தனம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, மலப்புரம் மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (9–ந் தேதி) பத்தனம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம், இடுக்கி, திருச்சூர், மலப்புரம், கோழிக்கோடு மற்றும் வயநாடு மாவட்டங்களிலும், 10–ந்தேதி பத்தனம்திட்டா, கோட்டயம், எர்ணாகுளம் மற்றும் இடுக்கி மாவட்டங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் எச்சரித்துள்ளது. மலைப் பகுதிகள் மற்றும் கொச்சி உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் மழையின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையுடன் சேர்த்து மணிக்கு 30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தில் (சில நேரங்களில் 50 கி.மீ வரை) பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும். மேலும், கடுமையான இடி–மின்னல் தாக்கங்கள் இருக்கும் என்பதால் பொதுமக்கள் திறந்த வெளிகளில் நிற்பதை தவிர்க்க வேண்டும் என பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது. மேலும் மலைப்பிரதேசங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களுக்கு (குறிப்பாக இடுக்கி, பத்தனம்திட்டா வழியாக) பயணம் செய்ய திட்டமிட்டுள்ளவர்கள், உள்ளூர் வானிலை மாற்றங்களைச் சரிபார்த்து விட்டுப் பயணத்தைத் தொடங்குவது பாதுகாப்பானது என்றும் கூறப்பட்டுள்ளது.

# திருப்பதி பிரம்மோற்சவம்-மகாளய அமாவாசை: சென்னையில் இருந்து சிறப்பு பஸ்கள்!

திருப்பதி, அக். 08–

திருப்பதி பிரமோற்சவம் திருவிழா நடைபெற்று வருகிறது. இதையொட்டி சென்னை, திருச்சி, தஞ்சாவூர், சேலம், கோயம்புத்தூர், மதுரை, காரைக்குடி, கும்பகோணம், நாகப்பட்டினம், செங்கோட்டை, திருச்செந்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில், புதுச்சேரி, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், தாம்பரம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, அரூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் இருந்து திருப்பதிக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகிறது.



மேலும் திருப்பதியில் இருந்து இந்த இடங்களுக்கும் இன்று முதல் 21–ந்தேதி வரை பக்தர்களின் தேவைக்கு ஏற்ப தினசரி 150 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. சேலம், கோவை, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மதுரை, காரைக்குடி, நாகப்பட்டினம், செங்கோட்டை, திருச்செந்தூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர்கோவில் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களில் இருந்து இயக்கப்படும் பஸ்களுக்கு முன்பதிவு வசதியும் செய்யப்பட்டுள்ளது. இந்த சேவையை பக்தர்கள் முழுமை யாக பயன்படுத்தி பயணம் மேற்கொள்ளு மாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதுதவிர 9–ந்தேதி (வெள்ளிக்கிழமை) 10–ந்தேதி (சனிக்கிழமை) மகாளய அமாவாசை மற்றும் 11–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வார விடுமுறை நாட்களையொட்டி சென்னையில் இருந்து இதர இடங்களுக்கும் பிற இடங்களில் இருந்து கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் உள்ளிட்ட பல இடங்களுக்கு நாளை 1075 பஸ்களும், சனிக்கிழமை 845 பஸ்களும் இயக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது. கோயம்பேட்டில் இருந்து நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை 210 பஸ்களும் சனிக்கிழமை 180 பஸ்களும் இயக்கப்படுகிறது.

பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்களும் இயக்கப்பட உள்ளன. மேலும் ஞாயிற்றுக்கிழமை அன்று சொந்த ஊரில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக 875 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

# திருப்பதி வரும் பக்தர்கள் வசதிக்காக கருட மேப் புதிய செயலி அறிமுகம்!

திருமலை, அக். 08–

திருமலையில் உள்ள அனைத்து சுப இடங்களும் செயலியில் தோன்றும். அங்கு செல்வதற்கான அனைத்து வழிகளும் காட்டப்படும்.

திருப்பதி கோவிலுக்கு வரும் பக்தர்கள் யாருடைய உதவியும் இன்றி தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை எளிதாகச் சென்றடையும் வகையில், திருமலை தேவஸ்தானம் 'கருட மேப்' என்ற செயலியை உருவாக்கியுள்ளது.

இந்தச் செயலி, திருமலை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் கொண்டு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு பக்தர் எந்த இடத்திற்குச் செல்ல விரும்பினாலும், செயலியில் அந்த இடத்தின் பெயரை உள்ளிடுவதன் மூலமோ அல்லது குரல் கட்டளை கொடுப்பதன் மூலமோ எளிதாக அந்த இடத்தை அடையலாம்.

திருமலையில் உள்ள அனைத்து சுப இடங்களும் செயலியில் தோன்றும். அங்கு செல்வதற்கான அனைத்து வழிகளும் காட்டப்படும்.

நடந்தே செல்ல வேண்டிய தூரம், வாகனத்தில் செல்ல வேண்டிய தூரம் மற்றும் சென்றடைய ஆகும் நேரம் ஆகியவை காட்டப்படும். மேலும், உடனடியாகச் சென்றடைவதற்கான எளிதான வழியையும் இது குறிப்பிடுகிறது.

இவ்வாறு, பல்வேறு வகையான தரிசன நுழைவாயில்கள், வரிசை வளாகங்கள், லட்டு மையங்கள், விருந்தினர் இல்லங்கள், உணவுக் கூடங்கள், குடிநீர் மையங்கள், மருத்துவ மையங்கள் போன்றவை குறித்த முழுமையான தகவல்களை இந்தச் செயலி மூலம் பெறலாம்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020